புரட்சிப்
# பெரியார் முழக்கம்



திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • நவம்பர் 28, 2024 • புரட்சி 24 • முழக்கம் 47 • விலை ரூ.3.00


# ஜாதி ஒழிப்புப் போராளிகளுக்கு வீரவணக்கம்

நவம்பர் 26,1957 அன்று ஜாதியைப் பாதுகாக்கும் சட்டப்பிரிவுகளைக் கொளுத்தி சிறைச் சென்ற – உயிர் நீத்தப் போராளிகளை நினைவு கூறும் விதமாகக் கழக சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் வீரவணக்கக் கூட்டங்கள் நடைபெற்றது.

**திண்டுக்கல்:** பழனியில் ஜாதி ஒழிப்பு – சட்ட எரிப்புப் போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு 26.11.24 அன்று திண்டுக்கல் மாவட்ட தி.வி.க. சார்பில் நடைபெற்றது.

முன்னதாக பழனியில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்விற்கு மாவட்டச் செயலாளர் மாக்சிம் கார்க்கி தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் ராஜா முன்னிலை வகித்தார்.

திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை மாவட்ட அமைப்பாளர் தமிழ் முத்து, சட்ட எரிப்பு நாள் குறித்து சுருக்கமாக உரை நிகழ்த்தினார். பழனி ஒன்றியச் செயலாளர் கிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினார்.

ஒட்டன்சத்திரம் ஒன்றியத் தலைவர் கபாலி, செயலாளர் ஜோசப், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாச்சிமுத்து, அமைப்பாளர் சங்கர், தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் ஆயுதன், ஆயக்குடி பேரூர் பொறுப்பாளர் ஜெயசங்கர் மற்றும் மானூர் ரமேஷ், ஒபுளாபுரம் குமார், சசிக்குமார், வசந்த், கீர்த்தி, கலை, சரண், முகிலரசன், ஈஸ்வரன், தினேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிறைவாகப் பழனி ஒன்றிய அமைப்பாளர் பெரியார் நன்றி கூறினார்.

**சென்னை :** நவம்பர் 26,1957 அன்று ஜாதியைப் பாதுகாக்கும் சட்டப்பிரிவுகளைக் கொளுத்தி சிறைச் சென்ற – உயிர் நீத்தப் போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு 26.11.2024 அன்று இராயப்பேட்டை பெரியார் படிப்பகம் முன்பு நடைபெற்றது.

நிகழ்வில் பெரியார் சிலை முன்பு அமைக்கப்பட்டிருந்த நினைவேந்தல் சுடரை கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் ஏற்றி வைத்தார். பின்னர் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். வட சென்னை மாவட்டத் தலைவர் சேத்துப்பட்டு இராசேந்திரன் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தார்.

இதில் சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், அமைப்பாளர் எட்வின் பிரபாகரன் மற்றும் பகுதிக் கழக – இளைஞரணி – மாணவரணியினர் திரளாகப் பங்கேற்றனர்.

**சேலம்:** சேலம் கிழக்கு மாவட்டக் கழக சார்பில் ஜாதியை பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டப்பிரிவுகளைக் கொளுத்தி – வீர மரணம் அடைந்த ஜாதி ஒழிப்புப் போராளிகள் நினைவாக 26.11.24 அன்று காலை தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து , ஜாதி ஒழிப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு கிழக்கு மாவட்டத் தலைவர் சக்திவேல் தலைமை தாங்கினார், டேவிட், பாலு , தேவராஜ், பிரபு, ஏற்காடு தேவா, செல்வம், ஆனந்தி, வெற்றி முருகன், பரமேஸ், இளம்பிள்ளை ரமேஷ், மோகன்ராஜ், சௌந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருப்பூர்:** திருப்பூரில் நடைபெற்ற வீரவணக்க நிகழ்விற்கு கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் முகில்ராசு முன்னிலை வகித்தார்.

நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, திராவிடர் கழகத்தின் மாவட்டத் தலைவர் ஆறுச்சாமி, ஆதித்தமிழர் பேரவை பேரவை துணைப் பொதுச் செயலாளர் விடுதலைச் செல்வன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் ஏ.பி.ஆர் மூர்த்தி, புரட்சிகர இளைஞர் முன்னணி தமிழமுதன், புரட்சிகர மக்கள் அதிகாரம் மாவட்டச் செயலாளர் கார்த்திகேயன், மக்கள் பாதுகாப்புக் கூட்டமைப்பு கார்மேகம், கழக சமூக வலைதளப் பொறுப்பாளர் பரிமளராசன், இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் சிறப்புரையாற்றினார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா, பகுதிக் கழகச் செயலாளர் ராமசாமி, மாநகரத் தலைவர் தனபால், மாநகர அமைப்பாளர் முத்து, வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், பல்லடம் நகர அமைப்பாளர் கோவிந்தராஜ், மடத்துக்குளம் ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன், மாநகர அமைப்பாளர் சரஸ்வதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மேட்டூர்:** மேட்டூர் நகரக் கழக சார்பில் ஜாதி ஒழிப்பு – சட்ட எரிப்புப் போராளிகளுக்கு வீரவணக்க நாள் தெருமுனைக் கூட்டம் 26.11.2024 அன்று மேட்டூர் சின்ன பார்க் பகுதியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு கழக சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு தலைமை தாங்கினார்.

திராவிடர் பண்பாட்டு நடுவத்தின் பொறுப்பாளர் முல்லை வேந்தன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொறுப்பாளர் சிவக்குமார், கழகத் தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு ஆகியோர் சட்ட எரிப்பு நாள் குறித்து உரையாற்றினார்கள்.

நிறைவாக தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் சுகந்தன் பிரபாகரன் நன்றி கூறினார். கூட்டத்திற்கு மேட்டூர், மேட்டூர் RS, நங்கவள்ளி ஆகியப் பகுதிகளில் இருந்து தோழர்கள், பொறுப்பாளர்கள் வந்திருந்தனர்.

**கோவை:** கோவை மாவட்டக் கழக சார்பில் காந்திபுரம் பெரியார் சிலை முன்பு மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன் தலைமையில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இதில் மாநகரச் செயலாளர் வெங்கட், மாநகரத் தலைவர் நிர்மல் குமார், மாவட்டச் செயலாளர் பன்னீர்செல்வம், மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன் உரையாற்றினர்.

## அம்பேத்கர் தந்த எச்சரிக்கை

# தென்னாட்டவரை இந்தி பேசும் மாநிலங்கள் அடக்கி ஆளும் ஆபத்து

வட மாநிலங்கள் தென் மாநிலங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் ஆபத்துகள் இந்தியாவில் உருவாகிவிடும் என்பதை முன்கூட்டியே எச்சரித்திருக்கிறார் டாக்டர் அம்பேத்கர் மொழிவழிமாநிலங்கள் குறித்த சிந்தனை என்ற நூலில் அவர் எழுதியிருப்பதாவது :

மாநிலங்களின் பிரிவினைக்கான ஆணையம் மாநிலங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியிருப்பது மட்டுமல்ல, தென்னாடு வடநாடு மோதல்களுக்கும் வழி வகுத்திருக்கிறது. உ.பி, பீகார் என்ற இரண்டு பெரிய மாநிலங்களையும் அப்படியே நீடிக்க அனுமதித்துவிட்டார்கள். இந்த வடமாநிலங்களுக்கு வலிமை சேர்ப்பது போல், மற்றொரு பெரிய மாநிலமாக மத்திய பிரதேசமும், ராஜஸ்தானும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது வடக்கு தெற்கு மோதலை உருவாக்கியிருக்கிறது. வடக்கு இந்தி பேசும் மாநிலங்கள், தெற்கு இந்தி பேசாத மாநிலங்கள், இந்தி பேசும் மாநிலங்களில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கை அளவே பெரும்பான்மை மக்களுக்கு தெரியாது. இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் இந்தி பேசுவோர் எண்ணிக்கை 48 சதவீதம். இந்த உண்மையை உற்று கவனித்து ஆராய்ந்தால் ஒரு உண்மை நிச்சயமாக புரியும்.

இந்தி பேசும் பெரும்பான்மையோரை, ஒன்றாக்கி விட்டு, தென்னாட்டு மக்களை சிதறடித்திருக்கிறது மாநிலங்களைப் பிரிக்கும் ஆணையம். தென்னாடு, வடநாட்டு ஆதிக்கத்தை எப்படி சகித்துக் கொண்டிருக்கும்? இந்தியை ஆட்சி மொழியாக அரசியல் சட்ட வரைவுக்குழு ஏற்றுக்கொண்ட போது காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் நடந்த ரகசியங்களை நான் இப்போது வெளிப்படுத்த விரும்புகிறேன். ஆட்சி மொழி குறித்துப் பேசும் சட்டத்தின் 115ஆவது பிரிவு பற்றிய விவாதம்தான் ஏனைய பிரிவுகள் மீதான விவாதங்களை விட மிகவும் மோதல்களையும், கொந்தளிப்பையும் கொண்டிருந்தது. இந்தப் பிரிவுக்கு எழுந்த சூடு பறந்த எதிர்ப்புகள் வேறு எந்த பிரிவுக்கும் விவாதங்களில் எழவில்லை. மிக நீண்ட விவாதங்களுக்குப் பிறகு நிர்ணயச்சபையில் இந்திக்கு ஆதரவாக 78 வாக்குகளும், எதிராக 78 வாக்குகளும் கிடைத்தன. முடிச்சை அவிழ்க்க முடியவில்லை. நீண்ட நேரத்துக்குப் பிறகு காங்கிரஸ் கட்சிக்குள் இந்த ஆட்சி மொழி பிரச்சனை ஓட்டுக்கு வந்த போது ஆதரவாக 78 ஓட்டுகளும் எதிராக 77 ஓட்டுகளும் கிடைத்தன. இந்தி ஆட்சி மொழியாக ஏற்கப்பட்டது ஒரே ஓட்டு வித்தியாசத்தில் தான். என்னுடைய சொந்த நினைவுகளிலிருந்து நான் இந்த உண்மைகளைக் கூறுகிறேன்.

வரைவுக்குழு தலைவர் என்ற முறையில் காங்கிரஸ் கட்சிக்குள் நடந்த விவாதத்தின் போது அந்தக் கட்சியின் கூட்டத்துக்குள் பங்கேற்கும் வாய்ப்பு இயல்பாகவே எனக்குக் கிடைத்தது. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே வடக்கு – தெற்கு மோதல் இருந்தது. தென்னாட்டவர்கள் வட நாட்டினரை விரும்பவில்லை என்ற உண்மையையே இது உணர்த்துகிறது.

விரும்பாத இந்தநிலை வெறுக்கும் எல்லைக்கு மாறும். வடநாடு தன்னை ஒருங்கிணைத்துக் கொண்டு, தென்னக அரசியல் மீது எல்லைமீறும் ஆதிக்கம் செலுத்தினால் அது வட நாட்டினர் மீதான வெறுப்பாகவே மாறும். ஒரு மாநிலம் மத்தியில் செல்வாக்கு செலுத்திட வாய்ப்பு தருவது ஆபத்தானது. வடக்கிற்கும் தெற்கிற்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. வடக்கு பிற்போக்கானது தெற்கு முற்போக் கானது. வடக்கு மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடப்பது, தெற்கு பகுத்தறிவு சிந்தனை கொண்டது. கல்வியில் தெற்கு முன்னேறிச் செல்வது, வடக்கு பின்தங்கிக் கிடப்பது. தெற்கின் கலாச்சாரம் நவீனமானது, வடக்கின் கலாச்சாரம் பழமை யானது.

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் 1947 ஆகஸ்ட்15 ல் எப்படி பதவி ஏற்றுக் கொண்டார்? காசியிலிருந்து வந்த பார்ப்பனர்கள் யாகம் நடத்தி நாட்டை ஆளப்போகும் பிரதமரிடம் “ராஜதண்டத்தை”அளித்து பார்ப்பனர் கையிலிருந்த புனித கங்கை நீரை குடித்துத்தானே பதவியை ஏற்றார்?

இறந்த கணவனை எரியூட்டிய நெருப்பில் அண்மைக் காலங்களில் எத்தனை பெண்கள் உடன்கட்டை ஏற்றப்பட்டிருக்கிறார்கள்?

நமது குடியரசு தலைவர் (ராஜேந்திரபிரசாத்) காசிக்குப் போய் பார்ப்பனர்களின் காலை கழுவி, அந்தத் தண்ணீரை குடிக்கவில்லையா? வடக்கே இன்னும் “சதி” என்னும்உடன்கட்டை ஏறுதல் நடந்து கொண்டுதானே இருக்கிறது?

நாகா சாதுக்கள் வன்முறை வெறியாட்டம் நடத்திக் கொண்டுதானே இருக்கிறார்கள். கடந்த ஆண்டு அரித்துவாரா திருவிழாவில் இது நடந்ததே, உ.பி யிலிருந்து இதை எல்லாம் எவராவது எதிர்த்தார்களா?

– நிமிர்வோம் மே 2017 இதழ்

தலையங்கம்

# ஏன் உறுதிமொழி எடுக்குறோம்?

அரசமைப்புச் சட்டத்தின் இறுதி வடிவத்தை அரசியல் நிர்ணய அவை முன்பாக அம்பேத்கர் தாக்கல் செய்த நாள் நவம்பர் 26,1949. 75 ஆண்டுகள் ஓடிவிட்டன;

தமிழ்நாடு முதலமைச்சர் அரசமைப்புச் சட்டத்தின் முகவுரை வலியுறுத்தும் நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய சட்டப் பிரிவுகளைப் படித்து உறுதியேற்கும் நாளாக இதைப் பின்பற்றுமாறு அறிவித்தார். இப்படி ஒரு உறுதிமொழியை எடுக்க வேண்டிய அவசியமும் தேவையும் ஏன் வந்தது?

ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் ஒன்றிய ஆட்சி, அரசியல் சட்டத்தின் அடிப்படைகளைத் தகர்த்து வரும் ஆபத்துகளை மக்களுக்கு எச்சரிக்க வேண்டும் என்பது தான் இதன் நோக்கம்.

குறிப்பாக இந்தியாவை இந்து ராஷ்டிரமாக மாற்றத் துடிக்கும் ஒன்றிய ஆட்சிக்கு அரசியல் சட்டத்தில் இடம் பெற்றுள்ள "மதச்சார்பின்மை" என்ற ஒரு சொல் தான் மிகப்பெரிய தடையாக வந்து நிற்கிறது. அவர்கள் கடுமையாக வெறுக்கிறார்கள். 2016இல் உள்துறை அமைச்சராக ராஜ்நாத்சிங் இருந்த போது இதை வெளிப்படையாகவே பேசினார். "மதச்சார்பின்மை என்பதே அவமதிப்புச் சொல் (Abusive Words) அதைப் பயன்படுத்தவே கூடாது. வகுப்புப் பதட்டங்களையே இந்த மதச்சார்பின்மை என்ற சொல் உருவாக்குகிறது" (நாடாளுமன்ற உரை 26.11.2016)

மதச்சார்பின்மை என்ற ஒரு சொல் அரசியல் சட்டம் உருவாக்கிய போது சட்டத்தில் இடம்பெறவில்லை என்றும், அவசரநிலைக் காலத்தில் பிரதமராக இருந்த இந்திரா காந்தி தான் இதைச் சட்டத்தில் திணித்தார் என்றும் பாஜகவினரும், ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களும் பேசி வருகின்றனர். இதற்கு தெளிவான விளக்கம் உண்டு.

அரசியல் சட்டத்தின் உள்ளடக்கமே மதச்சார்பின்மையை வலியுறுத்துகிறது. அதை வெளிப்படையாக அறிவிக்கத் தேவையே இல்லை என்பது தான் நமது பதில். அரசியல் சட்டப்பிரிவு 15, மதம் - இனம் - ஜாதி அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்று கூறுகிறது. பிரிவு 16, பொது வேலைகளில் பாகுபாடு காட்டக்கூடாது என்று கூறுகிறது. பிரிவு 25, தனிமனித மதச் சுதந்திர உரிமையை அங்கீகரிக்கிறது. பிரிவு 325, மத அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் பாகுபாடு காட்டக்கூடாது என்று கூறுகிறது. இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு என்பதைத் தெளிவாக இந்தப் பிரிவுகளில் வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மதச்சார்பின்மை என்ற அறிவிப்புக்கே இடம் இல்லாமல் போய்விட்டது. இந்தியாவில் இந்திரா காந்தியின் காங்கிரசு ஆட்சியை வீழ்த்துவதில் ஆர்.எஸ்.எஸ். போன்ற மதவாத சக்திகள் அரசியலைக் கையில் எடுத்த நிலையில், சட்டத்தில் மதச்சார்பின்மை என்ற சொல்லை இணைத்து சட்டத்தின் நோக்கத்தை உறுதி செய்தார் இந்திரா காந்தி. அவசரகால அடக்குமுறையில் நமக்கும் உடன்பாடு இல்லை. ஆனால் அதை ஒரு வாய்ப்பாக்கிக் கொண்டு மதவாதம் செயல்பட்டது என்பதை மறுத்துவிட முடியாது. அதன் காரணமாகவே இந்திரா காந்தி, அவசர நிலை காலத்தில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைத் தடை செய்தார். திருக்குறளில் தமிழ் என்ற வார்த்தை இடம்பெறவில்லை என்ற காரணத்தால் திருக்குறளே தமிழ் இல்லை என்று கூற முடியுமா? அம்பேத்கர் வரைவு செய்த அரசியல் சட்டத்தின் தொடக்கத்தில் ஜனநாயகம் என்ற சொற்றொடர் கூட இடம்பெறவில்லை. அதற்காக இந்தியா ஜனநாயக நாடு இல்லை என்று கூறிவிட முடியுமா?

பெரும்பான்மை மக்களாக இந்துக்கள் இருக்கிறார்கள் என்பதற்காகவே இந்தியாவை இந்துக்கள் நாடு என்று மதச்சாயம் பூசும் முயற்சிகளை அம்பேத்கர் ஏற்கவில்லை. லண்டன் வட்ட மேசை மாநாட்டில் இது குறித்து எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்த அறிக்கையில் அம்பேத்கர் மிகச்சிறந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

அரசியல் பெரும்பான்மையையும் மதப் பெரும்பான்மையையும் தனித்தனியாக பிரித்துப் பார்க்க வேண்டும். அரசியல் பெரும்பான்மை என்பது ஜனநாயகம். மதப் பெரும்பான்மை என்பது மதவாதம். அரசியல் பெரும்பான்மை மாற்றத்திற்கு உட்பட்டது. பிறவி அடிப்படையில் தீர்மானிக்கப்படும் மதப் பெரும்பான்மை மாற்றவே முடியாதது. ஜனநாயகப் பெரும்பான்மையின் கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும். மதவாதப் பெரும்பான்மையின் கதவுகள் திறக்கவே முடியாது. அது மூடப்பட்டே இருக்கும். அரசியல் பெரும்பான்மை அனைத்து மதத்திற்கும் உரிமையானது. இந்துப் பெரும்பான்மை ஒரு மதத்திற்கு மட்டுமே உரிமையானது. எனவே இந்திய ஜனநாயகத்தில் அரசியல் பெரும்பான்மைக்கு மட்டுமே இடம் உண்டு. மதப் பெரும்பான்மைக்கு இடமில்லை என்று அம்பேத்கர் தெளிவுபடுத்தியிருக்கிறார். இதைவிட வேறு விளக்கம் தேவையில்லை.

காஷ்மீர் தனி உரிமையைப் பறித்ததும், குடியுரிமை சட்டத்தில் மதத்தைத் திணித்ததும், இந்திய குடிமக்களான இஸ்லாமியர்களைப் பாகிஸ்தான் குடிமக்களைப் போல அன்னியராகக் கருதுவதும், பாஜகவின் ஆட்சி, அதிகார அமைப்புகளில் சிறுபான்மையினரை முற்றாக ஒதுக்கி வைப்பதும், எவ்வித ஆதாரங்களும் இல்லாமல் பாபர் மசூதியை இடித்து விட்டு இராமன் கோயில் கட்டியதும் மதச்சார்பின்மை கோட்பாடுகளைச் சீர்குலைப்பதற்கான சான்றாகும். இன்னும் ஏராளமாகப் பட்டியலிட முடியும்.

இந்த ஆபத்துகளை மக்களிடம் சுட்டிக்காட்டி எச்சரிக்கவே அரசியல் அமைப்பு முகவுரையைத் தமிழ்நாடு அரசு உறுதியேற்கிறது.

அரசியல் சட்டம் தீண்டாமையைத் தடை செய்தாலும், இந்து மதத்திற்குள் தீண்டாமை, பாகுபாடுகளை மதச்சுதந்திரம் என்ற பெயரில் வழங்கியிருக்கிறது. இதை எதிர்த்துத்தான் பெரியார் அந்தச் சட்டப்பிரிவுகளை இதே நவம்பர் 26,1957இல் தீயிட்டு எரிக்கும் போராட்டத்தை நடத்தினார். பல்லாயிரக்கணக்கான பெரியார் தொண்டர்கள் அந்தப் பிரிவுக்கு தீயிட்டு சிறையேகினார்கள். அதே மதத் தீண்டாமையை எதிர்த்து தான் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக வேண்டும் என்பதை பெரியார் முன்னெடுத்தார். தமிழ்நாடு அரசும் அதற்கான சட்டத்தை நிறைவேற்றியது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்

## "அவாளின் புதியக் கண்டுபிடிப்பு"

• விமானத்தைக் கண்டுபிடித்தது வேதகால முனிவர் என்கிறார் உ.பி ஆளுநர். பார்ப்பனர்கள் கடல் தாண்டிப் போவது பாவம் என்கிற ஒரே காரணத்தால் தான் அதை ரகசியமாக மனசுக்குள் பூட்டி வைத்திருந்தார் அப்படித்தானே மேடம்?

• முதலமைச்சரின் குடும்பத்தை இழிவாகப் பேசினாலும் கஸ்தூரியின் குடும்பத்தைக் கருதி ஜாமீன் வழங்க வேண்டும் என்று நீதிபதி ஜி.ஆர்.சாமிநாதன் குடும்பம் அறிக்கை வெளியிடுகிறது. இதுதான் சனாதனம்!


• தமிழ்நாட்டின் ஒரே திராவிட அரசியல் கட்சி தி.மு.க மட்டுமே. அதனால்தான் தமிழ்நாடு முதல்வர் நீதிக்கட்சி தொடக்க நாளுக்கு வாழ்த்துக் கூறுகிறார். எடப்பாடியைக் கேட்டால் இவையெல்லாம் அறிஞர்கள் விவாதிக்கும் பிரச்சினை என்று கூறி விடுவார்.

• சங்கி என்று என்னைச் சொன்னால் செருப்பால் அடிப்பேன் என்று சீறிய சீமான், இன்று சங்கி என்றால் நண்பன் என்று அர்த்தம் கூறுகிறார். செருப்பும் நட்பும் இணைகிறது... இதுதான் மண்டியிடாத மானம். புரிந்து கொள் என் தமிழ்ச் சொந்தங்களே.!

• திமுக குடும்ப அரசியல் நடத்துகிறது என்று கொதிக்கும் எடப்பாடியார் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் குடும்ப வாரிசாக முதல்வர் பதவியேற்ற ஜானகி அம்மையாருக்கு நூற்றாண்டு விழா எடுத்து குடும்ப வாரிசுக்கு புகழ்மாலை சூட்டுகிறார்.

• இசைவாணி, ரஞ்சித் பக்கம் உறுதியாக நிற்போம்! இசைவாணியின் குரல் பெண்களின் உரிமைக்குரல். உச்சநீதிமன்ற தீர்ப்பை அவமதித்து ஐயப்பன் கோயிலுக்குள் பெண்களை விட மறுக்கும் சட்டவிரோதிகள் மீது குற்றச் சட்டங்கள் பாய வேண்டும். இசைவாணியின் பாடலை தமிழ்நாடு முழுதும் பாடுவோம்.

## "வரலாற்றைப் புரட்டியவர்"



இந்திய வரலாற்றைப் புரட்டிபோட்ட புரட்சியாளர் - சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் புகழ் ஓங்குக!

உயர்கல்வியிலும் - வேலைவாய்ப்புகளிலும் - தலைமைப் பொறுப்புகளிலும் நமது திறமையால் சாதனை படைத்து அவருக்கு நன்றி செலுத்துவோம்! சாதிக்கப் பிறந்தவர்களுக்குச் சாதி தடையில்லை என்பதை நிறுவுவோம்!

- தமிழ்நாடு முதல்வர் தனது முகநூல் பக்கத்தில் பதிவு!

## "எங்கள் வழிகாட்டி வி.பி.சிங்"

புதுடில்லி, இடைத்தேர்தல் முடிவுகள் குறித்து ஹிந்தி தொலைக்காட்சியில் விவாதம் நடந்து கொண்டிருந்தது. இதில் பீகார் மாநில ராஷ்ட்ரிய ஜனதா தள் சார்பாக கல்லூரி மாணவியும், ராஷ்ட்ர ஜனதா தள் மாணவர் அணியின் செய்தித்தொடர்பாளருமான பிரியங்கா பாரதியும் கலந்து கொண்டார். பாஜக சார்பில் தலைமை நிலைய செய்தித் தொடர்பாளராக இருக்கும் சுதான்சு திரிவேதி கலந்துகொண்டார்.

சுதான்சு திரிவேதி பேசும்போது "வி.பி.சிங்கை ஜாதியவாதிகள் கொண்டாடினார்கள். அவரால் பலன் கிடைக்காது என்று தெரிந்த பிறகு தூக்கி வீசிவிட்டனர் என்று பேசினார். இதுதான் வி.பி.சிங்கிற்கு ஜாதியவாதிகள்(மண்டல்வாதிகள்) கொடுத்த மரியாதை" என்று பேசினார்.

அதுவரை அமைதியாக கேட்டு கொண்டு இருந்த பிரியங்கா பாரதி கடுமையான கோபம் கொண்டார். உடனடியாக சுதான்சுவைப் பார்த்து "நீங்கள் இன்னும் ஜாதி வெறியோடு தான் திரிகிறீர்கள்."

வி.பி.சிங் எங்களது வழிகாட்டி போன்றவர், அவரது பெயரை உச் சரிக்கக் கூட உங்களுக்குத் தகுதி இல்லை. உங்களுக்கு முன்னால் சரிசமமாக நான் உட்கார்ந்து பேசு கிறேன் என்றால் அதற்கு எங்கள் தலைவர் வி.பி.சிங் தான் காரணம். ஒரு காலத்தில் சாலையில் நடக்கக்கூட உரிமையில்லாத நாங்கள் இன்று கிராமத்தில் இருந்து நகரத்திற்கு வந்து டில்லி பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று பெரும் பதவிகளை அலங்கரிக்கிறோம். எங்களின் கைகளைப் பிடித்து அழைத்துவந்தவர் வி.பி. சிங் என்னால் உங்களின் முட்டாள் தனமான பேச்சை கேட்டு கடந்து போகமுடியாது..

முதலில் உங்களுக்கு வி.பி. சிங்கின் பெயரைக் கூட உச்சரிக்க தகுதி இல்லை. மற்றொரு முறை உங்களது அழுகிப் போன மூளையில் உதிக்கும் நாற்றமெடுக்கும் ஜாதிவெறிச் சொற்களை கொட்டினால் நீங்கள் நிற்கும் இடம் அதிர்ந்துவிடும் அரங்கத்தை விட்டு வெளியே போகமுடியாது என்று எச்சரிக்கிறோம்" என்று கடுமையாகப் பேசினார். இதனை அடுத்து பாஜக செய்தித் தொடர்பாளர் நிகழ்ச்சி முடியும் வரை பேசவே இல்லை.

# பெரியார் - மறைமலையடிகள் மோதல் எப்படி முடிவுக்கு வந்தது?

**சென்னை கழகத் தலைமை அலுவலகத்தில் 29.10.2024 அன்று நிமிர்வோம் வாசகர் வட்ட சார்பில் குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு சிறப்புக் கூட்டம் நடந்தது. அடிகளார் படத்தைக் கழகப் பொதுச்செயலாளர் திறந்து வைத்து ஆற்றிய உரை. கடந்த இதழின் தொடர்ச்சி..**

**பெரியார், மறைமலையடிகள் மோதல் முடிவுக்குவந்த நிகழ்வுகளை ஆய்வாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி எழுதிய “திராவிட இயக்கமும் வேளாளரும்” நூலில் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.**

## விடுதலை இராசேந்திரன்





சுயமரியாதை இயக்கத்தினருக்கும் சைவருக்கும் நடுவே சில சில உரசல்கள் ஏற்பட்டு வந்தன. இவ்வாறு சிணுசிணுத்துக் கொண்டிருந்த சூழ்நிலையில் ஒரு பெருமாற்றம் ஏற்பட்டது. 1935ஆம் ஆண்டில், மறைமலை அடிகள் எழுதிய ‘அறிவுரைக் கொத்து’ என்ற கட்டுரை நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இடைநிலைத் தேர்வுக்குப் பாடமாக வைக்கப்பட்டது. அந்நூற் கட்டுரைகளில் ஒன்றான ‘தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும்’ நாட்டு மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறதென்று ‘இந்து’ ‘தினமணி’ ‘சுதேசமித்திரன்’, ‘ஊழியன்’ போன்ற தேசிய இதழ்கள் கூக்குரலிட்டன…..

தேசிய இயக்க இதழ்கள் மறைமலை அடிகளைக் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கியதும், அவர் மீதிருந்த கசப்பையும், முன்பு கொண்டிருந்த முரண்பாட்டையும் புறந்தள்ளிவிட்டுச் சுயமரியாதை இயக்கம் அவருக்குத் துணையாகக் களத்தில் இறங்கியது. ‘குடிஅரசு’, ‘பகுத்தறிவு’, ‘ஜஸ்டிஸ்’ ஆகிய இதழ்கள் மறைமலையடிகளின் துணிபுகளை நியாயப்படுத்தியும், தமிழ்ச் சமூகம் பற்றிய அவருடைய ஆக்கப்பூர்வமான விமர்சனத்தைத் தாங்கியும் கட்டுரைகளையும் தலையங்கங்களையும் எழுதின. ‘எது இழிவு? பாரதி பாடலா - அறிவுரைக் கொத்தா’ என்ற கேள்வியைக் ‘குடிஅரசில்’ எழுப்பிய நீலாவதி (இராம சுப்பிரமணியம்), மறைமலையடிகளைப் போலவே பாரதியாரும் தமிழரிடமுள்ள இழி குணங்களை எடுத்துக்காட்டி எழுதிய பகுதிகளைக் காட்டினார். கைவல்யம் எழுதிய கட்டுரையில் ‘அறிவுரைக் கொத்தின் ஆட்சேபனைக்கு மூலக்காரணம்’ பார்ப்பன சூழ்ச்சியே என்று நிறுவிக் காட்டினார். ‘பகுத்தறிவு’ (செப்டம்பர் 1935) மறைமலையடிகளுக்கு எதிரானது ‘போக்கிரித்தனமான புகார்’ என்று வருணித்தத்தோடு, உ.வே.சாமிநாதையரோடு ஒப்பிட்டு, மறைமலையடிகளின் தமிழ்ப்பணிகளை அவரினும் சிறந்ததாகப் போற்றிப் புகழ்ந்தது. மறைமலையடிகள் தாக்குதலுக்கு உள்ளானமைக்குக் காரணம் அவர் பார்ப்பனரல்லாதாராயினும் தேர்ந்த அறிவராய், தமிழில் ஆழங்கால்பட்டவராய் விளங்கியதைப் பிராமணர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பது சுயமரியாதை இயக்க மறுப்புரைகளின் திரண்ட கருத்து. மொத்தத்தில் பொது எதிரியின் தாக்குதலை வீழ்த்துவதற்குச் சுயமரியாதை சைவத் தலைவரான மறைமலையடிகளுக்கு அரணாக நின்றது.

தலைவர் இருவருக்கும் இடையே ஏற்பட்ட நல்லிணக்கம் சில ஆண்டுகளுக்குப் பின் கிளர்ந்தெழுந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது சைவருக்கும் சுயமரியாதை இயக்கத்துக்குமான கூட்டணியாக உருப்பெற்றது. 1937 தேர்தல் வெற்றிக்குப் பிறகு இராஜாஜி தலைமையில் அமைந்த காங்கிரஸ் அரசாங்கம், சில காலத்திற்குள் பள்ளிக்கூடங்களில் கட்டாய இந்திப் படிப்பை நுழைக்க முற்பட்டது. தமிழ் மொழிக்கும் பண்பாட்டுக்கும் தீங்கு விளைவிக்கும் அடாவடிச் செயலாக இது பரவலாகக் கருதப்பட்டது. சுயமரியாதை இயக்கம் காங்கிரசின் அறைகூவலை ஏற்று,

> **அடிகளுக்கு பெரியார் அனுப்பிய நூல்கள்**
>
> ‘அறிவுரைக் கொத்து’ தொடர்பான போராட்டத்தையொட்டிப் பெரியாருக்கும் மறைமலையடிகளுக்கும் இடையே நல்லிணக்கம் ஏற்பட்டது. இதன் அடையாளமாக இயக்க நூல்கள் சிலவற்றைப் பெரியார் மறைமலையடிகளுக்கு அனுப்பி வைத்தார். அவற்றுக்குரிய விலையை மறைமலையடிகள் விடுத்துவைத்த போது, நூல்கள் அன்பளிப்பென்று கூறித் தொகையைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் பெரியார். ஆ.இரா. வேங்கடாசலபதி (ப-ர்), மறைமலையடிகளார் நாட்குறிப்புகள், 20 ஆகஸ்டு 1935, ப 78)

இந்தி எதிர்ப்புப் போரைத் தொடங்கியது. சைவரும் இந்தி எதிர்ப்பில் முனைந்து நின்றனர். இரு அணியினரும் இந்தியை எதிர்த்ததோடு, அதன் திணிப்புக்குரிய பின்னணி பார்ப்பனச் சூழ்ச்சியே என்ற புரிதலையும் கொண்டிருந்தனர்…..

இந்தி எதிர்ப்பு என்ற செயல் திட்டத்தின் அடிப்படையில் சைவருக்கும் சுயமரியாதை இயக்கத்துக்கும் கூட்டணி அமைந்தது. இதனையொட்டி ஏராளமான கூட்டங்களும் மாநாடுகளும் நடைபெற்றன. அம்மேடைகளைச் சைவப் பெரியோரும் சுயமரியாதை இயக்கத்தவரும் பகிர்ந்துகொண்டனர்.

ஆகஸ்டு 1937இல் துறையூரில் நடந்த மூன்றாவது சுயமரியாதை மாநாட்டில் பெரியார், அண்ணா, பொன்னம்பலனார், கே.எம்.பாலசுப்பிரமணியம், தி.பொ. வேதாச்சலம், கி.ஆ.பெ.விசுவநாதம் என்ற சைவரும் சுயமரியாதைக்காரருமாகப் பலர் கலந்துகொண்டு உரையாற்றினர். சென்னை இந்தி எதிர்ப்புக் குழுவின் சார்பில் 1937 செம்டம்பரில் நடந்த கூட்டத்தில் பார்ப்பனர் சூழ்ச்சியை விளக்கிச் சோமசுந்தர பாரதியார் பேசினார். அக்கூட்டத்தில் அண்ணாவும், கே.எம்.பாலசுப்பிரமணியமும் கலந்து கொண்டனர்.

சோமசுந்தர பாரதியார் தமிழகம் தழுவிய இந்தி எதிர்ப்புப் பிரச்சாரச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 1939 அக்டோபரில் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தின் சார்பில் நெல்லையில் நடந்தக் கூட்டத்தில் சைவப் புலவர்களான மு.சி.பூர்ணலிங்கம் பிள்ளையும், மா.வே. நெல்லையப்ப பிள்ளையும் முறையே தலைமையுரையும் நன்றியுரையும் ஆற்ற, சுயமரியாதை இயக்கத்தில் இளம்புயலாக வீசத் தொடங்கிய அண்ணா உரையாற்றினார்.

வழக்கமாகச் சைவப் புலவர்கள் நிரம்பி வழிந்த சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் திருச்சி மாநாட்டில் பெரியார், அண்ணா, குஞ்சிதம், குருசாமி எனக் குறிப்பிடத்தக்க சுயமரியாதை இயக்கத் தலைவர்களும் கலந்துகொண்டனர். 1937 டிசம்பரில் நடந்த இராமநாதபுர மாவட்டத் தமிழர் மாநாடும் அவ்வாறே அமைந்தது……

இருப்பினும் சைவருக்கும் சுயமரியாதை இயக்கத்துக்குமான கூட்டணியின் நடைமுறை வரம்பு விரைவிலேயே வெளிச்சத்துக்கு வந்தது. பார்ப்பனரல்லாதார் நலன் மற்றும் தமிழுக்கு ஆபத்து என்ற குறைந்தபட்ச ஒற்றுமைகளுக்கு அப்பாற்பட்ட விரிந்த குறிக்கோள்களைச் சுயமரியாதை இயக்கம் கொண்டிருந்தது. மேலும், அதன் அரசியல் இயக்கச் செயல்பாடுகளும் வேகமிக்கனவாக இருந்தன. இந்தி எதிர்ப்புப் போர் சூடுபிடித்ததும், சைவர், சுயமரியாதை இயக்கத்தவர் ஆகிய இவர்களின் செயல்பாடுகளை இயைபின்மை வெளிப்பட்டு விட்டது. முன்னர்க் குறித்த திருச்சி மாநாட்டில், காங்கிரஸ் அமைச்சரவைக் கொண்டுவந்த கட்டாய இந்திச் சட்டத்தில் கையெழுத்திட்டதால் (வெள்ளையரான) சென்னை மாகாண ஆளுநரின் மீது நம்பிக்கை போய்விட்டது என்ற தீர்மானத்தைப் பெரியார் கொண்டுவந்தார். “மாநாட்டிலே, சிலருக்கு இதனால் பயமும், கிலேசமும் ஏற்பட்டது,” அரசாங்கத்தைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்றும், அதற்குப் பதிலாக ஒரு தூதுக்குழு அனுப்பலாம் என்றும் சைவர்கள் மாற்றுத் திட்டத்தை முன்வைத்தனர். கட்டாய இந்தியால் பிரித்தானிய அரசுக்கு இழப்பு ஏதும் இல்லை என்பதால் ஆளுநர் இதில் தலையிடமாட்டார் என்றும், அதனால் பயன் தராத ஒரு தூது முயற்சியில் தாம் கலந்துகொள்ள விரும்பவில்லை என்றும் பெரியார் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

சுயமரியாதை இயக்கம் - சைவர் உடன்பாட்டின் வரையறுத்து எல்லையை இந்நிகழ்ச்சி தெளிவாகச் சுட்டி நிற்கின்றது. முதலாவதாக, சுயமரியாதை இயக்கத்தின் செயல்திட்டத்தில் இந்தி எதிர்ப்பு ஒரு சிறு கூறு மட்டுமே. சைவருக்கோ அதுவே முடிந்த முடிவான இலக்கு. அடுத்து, தனது அரசியல் குறிக்கோளை அடைவதற்குச் சுயமரியாதை இயக்கம் அரசியல் அதிகாரப் போராட்ட நடவடிக்கைகளில் இறங்கவும் அணியமாகஇருந்தது.சைவரோ சட்டபூர்வமான, ஆபத்துகளில்லாத எதிர் நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபடத் தயாராக இருந்தனர்.

இந்தி - பார்ப்பனியம் என்ற பொது எதிரியை வீழ்த்த வேண்டும் என்ற ஓரம்சத் திட்டத்தையே காரணமாகக் கொண்டு ஏற்பட்ட கூட்டணி அதிகநாள் தாக்குப்பிடிக்கவில்லை.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# மோடி - அதானி ஆட்டத்திற்கு முடிவு நெருங்குகிறது! சர்வதேசச் சிக்கலில் அதானி அண்ட் கோ

ர.பிரகாசு

சூரிய சக்தி மின்சாரக் கொள்முதல் விவகாரத்தில் இந்திய அதிகாரிகளுக்கு ரூ.2,100 கோடி லஞ்சம் கொடுத்த புகாரில், அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள நீதிமன்றம் கவுதம் அதானிக்கு பிடிவாரன்ட் பிறப்பித்திருக்கிறது. லஞ்சம் கொடுத்தது இந்தியாவில், ஆனால் வழக்கு போடப்பட்டது அமெரிக்காவில் எதற்காக என்று பலருக்கும் சந்தேகம். அமெரிக்க முதலீட்டாளர்களிடம் இருந்து பெற்ற முதலீட்டு பணத்தைதான் அதானி லஞ்சமாகக் கொடுத்துள்ளார் என்பது குற்றச்சாட்டு. சூரிய மின் திட்டம் பற்றித் தவறான தகவல்கள் தந்ததாகப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதானியும் அவரது கூட்டாளிகளும், 20 ஆண்டுகளில் 200 கோடி டாலர் (ரூ.16,888 கோடி ரூபாய்) மதிப்புள்ள சோலார் ஒப்பந்தங்களைப் பெற இந்திய அதிகாரிகளுக்கு 25 கோடி டாலர்(சுமார் ரூ.2,100 கோடி) லஞ்சம் கொடுத்தனர் என்று அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது. அதானி மீது வெளிநாட்டு லஞ்சம், முதலீட்டு மோசடி, பணப்பரிமாற்ற மோசடி சதி ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அமெரிக்க சட்டப்படி, அமெரிக்காவில் வணிகம் செய்யும் நிறுவனங்கள் வெளிநாட்டில் லஞ்சம் கொடுத்தாலும் வழக்கு தொடர அனுமதிக்கிறது. அமெரிக்க நிதி நிறுவனங்கள் மூலம் செய்யப்படும் பரிவர்த்தனைகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டால் வழக்குத் தொடரும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. லஞ்சம் தந்ததை மறைத்து அமெரிக்க முதலீட்டாளர்களை, அதானி ஏமாற்றியதாக அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

## மவுனம் காக்கும் மோடி!

அதானி மீது அமெரிக்காவில் குற்றம் நிரூபிக்கப்பட்டால், வெளிநாட்டில் லஞ்சம் கொடுத்ததற்கு 5 ஆண்டுகள், முதலீட்டுப் பத்திர மோசடி, பணப்பரிமாற்ற முறைகேடு, சதித்திட்டம் தீட்டுதல் போன்ற குற்றத்துக்காக 20 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படலாம். ஒருவேளை அதானி அமெரிக்காவில் இருந்திருந்தால் இந்நேரம் கைது செய்யப்பட்டிருப்பார். ஆனால் அவர் இந்தியாவில் இருப்பதால் இன்னும் கைது நடக்கவில்லை. ஆனால் அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்த இந்தியாவிடம் அமெரிக்கா கோரிக்கை வைக்க அதிக வாய்ப்புள்ளது. ஆனால் அவருடைய உற்ற நண்பரான மோடியின் ஆட்சியில் அது நடக்குமா என்பதுதான் மிகப்பெரிய கேள்வி. ஏற்கெனவே ஹிண்டன்பர்க் அறிக்கை பங்குச்சந்தையில் அதானி குழுமத்தின் முறைகேடுகளை அம்பலப்படுத்தியபோது, அதானி பிம்பத்தின் மீது விழுந்த கீறல்களைச் சரிசெய்யத்தான் மோடி அரசு முயன்றதே தவிர, முறைகேட்டை விசாரிக்க முற்படவில்லை.

அதானியின் முறைகேடுகள் குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. மொகுவா மொய்த்ரா ஆகியோர் தகுதி நீக்கம் செய்யப்பட்டு, நாடாளுமன்றத்தில் இருந்தே வெளியேற்றப்பட்டனர். ஹிண்டன்பர்க்கின் குற்றச்சாட்டு தனியொரு அதானியை குறிவைப்பது அல்ல, இந்தியப் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பது என்றெல்லாம் பாஜகவினர் முட்டுக்கொடுத்தனர். அதானியின் முந்த்ரா துறைமுகத்தின் வழியாக போதைப்பொருட்கள் கடத்தப்படுவதாக அவ்வப்போது வரும் செய்திகளும் இதுவரை பொருட்படுத்தப்படவில்லை. அதானி துறைமுகம், அதானி ரயில்வே, அதானி விமான நிலையங்கள் என அதானி வளம் கொழிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதில்தான் மோடி அரசு முனைப்புக் காட்டியது.

## திசைதிருப்பும் சங்கிகள்!

அந்த வகையில் தற்போது எழுந்திருக்கும் குற்றச்சாட்டுக்களிலும் அதானியைக் காப்பதில்தான் தீவிரம் காட்டுகிறது மோடி ஆட்சி. இன்னும் ஒருபடி மேலே போய், “எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள்தான் அதானியிடம் சோலார் மின்சாரம் வாங்குகின்றன. அப்படியானால் அவர்கள்தான் லஞ்சம் வாங்குகிறார்கள்” என்று குற்றச்சாட்டையே திசைதிருப்பியுள்ளனர். இதில் தமிழ்நாட்டின் பெயரும் அடிபடுகிறது. அதானி மீதான முறைகேட்டை விட்டுவிட்டு, அதானி - மோடியின் கூட்டு மோசடிகளை கேள்வி கேட்பதை விட்டுவிட்டு, அதானிக்கும் தி.மு.க. அரசுக்கும் தொடர்பு உள்ளது என பா.ம.க, அ.தி.மு.க போன்ற கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.

தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகும் கடந்த 3 ஆண்டுகளில் அதானி நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு சூரிய மின்சாரம் தொடர்பாக நேரடி ஒப்பந்தம் எதுவும் மேற்கொள்ளவில்லை. ஆனால் ஒவ்வொரு மாநிலமும் ஆண்டுதோறும் நுகர்கின்ற மொத்த மின்சாரத்தில் குறிப்பிடத்தக்க அளவு புதுப்பிக்கத்தக்க மின் சக்தியைப் பயன்படுத்த வேண்டும், தவறினால் அபராதம் செலுத்த வேண்டும் என்பது ஒன்றிய அரசின் விதிமுறை. அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாநிலமும் சூரிய ஒளி மின்சாரத்தை வாங்க வேண்டியுள்ளது. அப்படி வாங்காத பட்சத்தில் பல்வேறு விதமான அழுத்தங்களை மாநில அரசுகளுக்கு உருவாக்குகிறது. புதிய கல்விக்கொள்கையை அமல்படுத்தாவிட்டால் கட்டாயக் கல்வி சட்டத்திற்கு நிதி தர மாட்டோம் என்பதைப் போன்ற அழுத்தங்கள் இதற்குள் ஒளிந்திருகின்றன.

இதனடிப்படையில், தமிழ்நாடு மின்சார வாரியம் 2000 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (SECI) என்ற ஒன்றிய அரசு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா மூலம்தான் தமிழ்நாடு அரசு சோலார் மின் சக்தி கொள்முதலும் செய்கிறது. ஒரு யூனிட்டுக்கு 2.61 ரூபாய் எனத் தமிழ்நாடு அரசு ஒப்பந்தம் செய்திருக்கிறது. ஆனால் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அதானியுடன் நேரடி ஒப்பந்தம் செய்யப்பட்டபோது, ஒரு யூனிட்டுக்கு 7.25 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டது. தங்களின் மின் தேவைகளுக்காக மின்சாரத்தை விலை கொடுத்து வாங்கும் மாநில மின் வாரியங்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு அதானி நிறுவனத்திடமிருந்து பெற்று, மின்சாரத்தை விற்கும் இடைத்தரகராக சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா செயல்பட்டது என அமெரிக்க நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவை விசாரணைக்கு உட்படுத்தாமல், மாநில மின் வாரியங்களை நேரடியாகக் குற்றம்சாட்டுவது அப்பட்டமான திசைதிருப்பல்.

## நெருக்கடியில் அதானி!

முன்பு எழுந்த ஹிண்டன்பர்க் குற்றச்சாட்டு என்பது தனியார் நிறுவனத்தின் தரப்பால் வைக்கப்பட்டது. அதனால் விசாரணை வளையத்திற்குள் சிக்காமலேயே அதானி தப்பிவிட்டார். ஆனால் இப்போது புகார் எழுந்திருப்பது அமெரிக்க பங்குச்சந்தை ஒழுங்காற்று நிறுவனத்திடம் இருந்து என்பதால், விசாரணை வளையத்தில் இருந்து அதானி தப்புவது எளிதல்ல. அமெரிக்க முதலீட்டாளர்கள் ஏமாற்றப்பட்டிருப்பதை அந்நாட்டு பங்குச் சந்தை ஒழுங்காற்று நிறுவனமும், நீதிமன்றங்களும் மிகக் கடுமையான புகாராகவே எடுத்துக்கொள்ளும். வழக்கு விசாரணை நெறிமுறைகளும் கடுமையானதாகவே இருக்கும். தீர்ப்பும் ஓரிரு ஆண்டுக்குள் வந்துவிடும். அதனால் அதானி குழுமத்தில் தொடர்ந்து முதலீடுகள் மேற்கொள்ள பன்னாட்டு முதலீட்டாளர்கள் விரும்ப மாட்டார்கள்.

லஞ்சப் புகாரில் அமெரிக்க நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்ததில் இருந்து ஒருவாரத்திற்குள்ளாகவே, அதானி குழுமத்தின் பட்டியலிடப்பட்ட 10 நிறுவனங்கள் 2.78 லட்சம் கோடி ரூபாயை இழந்தன. குறிப்பாக குற்றச்சாட்டுக்கு உள்ளான அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம் மட்டும் 81,868 கோடி ரூபாய் சரிவைக் கண்டிருக்கிறது. அதானி குழுமத்துடனான மின்சார ஒப்பந்தத்தை ஆந்திரப் பிரதேச அரசு ரத்து செய்துள்ளது. உள்கட்டமைப்பு சார்ந்து அதானி குழுமத்துடன் கென்ய அரசு மேற்கொண்டிருந்த அனைத்து ஒப்பந்தங்களையும் அந்நாட்டு அதிபர் வில்லியம் ரூட்டோ ரத்து செய்துள்ளார். இலங்கை துறைமுகத் திட்டத்திற்காக அதானி குழுமத்திற்கு கடன் வழங்கும் முடிவில் இருந்து அமெரிக்காவின் சர்வதேச மேம்பாட்டு நிதிக் கழகம் பின் வாங்கியுள்ளது.

பிரெஞ்சு நாட்டின் முன்னணி எண்ணெய் நிறுவனமான டோட்டல் எனர்ஜீஸ் மேற்கொண்டு அதானி குழுமத்தில் புதிய முதலீடுகள் மேற்கொள்ள மாட்டோம் என அறிவித்துவிட்டது. இந்நிறுவனம் அதானி கிரீன் எனர்ஜியில் 20 விழுக்காடு பங்கையும், அதானி டோட்டல் கேஸில் 37 விழுக்காடு பங்கையும் கொண்டுள்ளது. வங்கதேசம் மற்றும் ஜப்பான் நிறுவனங்களும் அதானி குழுமத்துடனான முதலீடுகளை, உறவை மறுபரிசீலனை செய்ய முடிவெடுத்துள்ளன. சர்வதேச அளவில் நம்பகத்தன்மை அற்ற, மோசடி நிறுவனமாக முகத்திரை கிழிந்து நிற்கிறது அதானி குழுமம். மோடியே நினைத்தாலும், முயன்றாலும் இனி மோசடிப்பிம்பத்தை மறைப்பதோ, காப்பதோ இயலாது என்ற சூழலுக்கு தள்ளப்பட்டிருக்கிறார் அதானி!

அதானி மீதான தனிப்பட்ட ஊழல்களை விசாரிப்பதுடன் நிறுத்தாமல், பாஜகவுடன் அவருக்கு இருக்கும் தொடர்பு, பாஜக அரசால் அதானி அடைந்திருக்கும் ஆதாயங்கள், அதானியால் பாஜக என்ற கட்சி அடைந்திருக்கும் ஆதாயங்கள் என்பதையும் சேர்த்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். அதன்மூலம் மோடி - அதானி கூட்டு மோசடிகள், முறைகேடுகள் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட வேண்டும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : November 29, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran